# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,505 — 1939 ம் ௵ புரட்டாதி ௴ 15 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரங்கள்.

#### தென் மாகாண அரசாட்சி ஏசண்டரால் அறிவித்தல்.

*காட்டுச் சட்டத்தின் (311 ம் அதிகாரம்) 4 (1) ம் பிரிவின்கீழ்.*

இத்தால் சகலரும் அறிவது அதிஉத்தம தேசாதிபதியவர்கள் கீழே சொல்லப்பட்டிருக்கும் 1939 ம் ஆண்டு ஜூலை மீ 21 ந் திகதியில் அச்சிடப்பட்டிருக்கும் 8,466 ம் இலக்க "கெசற்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1939 ம் ஆண்டு ஜூலை மீ 17 ந் திகதியின் பிரசித்தத்தில் (Proclamation) அத்தோடு அணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் விவரிக்கப்பட்டிருக்கும் நிலம் 1939 ம் ஆண்டு ஒக்றோபர் மீ 20 ந் திகதி தொடக்கம் அதற்குப் பிற்பாடும் காட்டுச் சட்டத்தின் (311 ம் அதிகாரம்) 4 (1) ம் பிரிவின் கீழ்ப்படி ஒதுக்கிய காடாயிருக்குமென்று பிரசித்தமாக விளம்பரஞ்செய்கிறார்.

இப்படி ஒதுக்கிய காட்டிலே பின்னுற் சொல்லப்படும் பிரமாணங்கள் கவனிக்கப்பட வேண்டியதாயிருக்கும், அஃதாவது :—

(1) யாராகுதல் அக்காட்டிலே பிரவேசித்தால் அல்லது ஆடுமாடுகளைத் தப்பிப் போகவிட்டால் ;

(2) அலக்ஷியமாய் மரத்தை வெட்டி அல்லது துண்டித்து, அல்லது இழுத்து, ஏதாகுதல் நஷ்டம் வருவித்தால் ;

(3) வேணுமென்று மரத்தின் பட்டையை அல்லது இலையை உரித்து அல்லது உலுத்தினுல் அல்லது வேறேதாகுதல் நஷ்டம் யாதொரு மரத்துக்கு வரப்பண்ணினுல் ;

(4) நீரை நச்சுப்படுத்தினுல் ;

(5) தேசாதிபதியவர்கள் அக்காட்டின் நன்மைக்காக இட்ட கட்டளைக்கு விரோதமாய் அங்கே வேட்டையாடி, வெடிசுட்டு, மீன் பிடித்து, அல்லது கண்ணிவலை, துவக்கு இவைகளுடன் பதிவிருந்தால் அல்லது பதிவிடம் சரிக்கட்டினுல் அல்லது அவைகளை உபயோகித்தால், அல்லது யாதேனும் வெடிமருந்துகளை பாவித்தால் அல்லது ஆடு மாடுகளை மேய்த்தால் ;

அப்பேர்ப்பட்டவர்கள் குற்றஞ்செய்தவர்களாகக் காணப்பட்டு, குற்றவாளிகளாவார்களேயானுல் 50 ரூபாய்மட்டுக்கு அபராதமிறுக்க வேண்டியவர்களாவார்கள். அல்லது அவர்செய்த குற்றத்தின் நஷ்டக்கிரயம் 25 ரூபாவுக்கு மேலேயாகில் அவ்வவ் நஷ்டத்தின் இருமடங்கு தொகைகொடுக்க வேண்டியவர்களாவார்க்கள்.

யாராகுதல் :—

(1) அக்காட்டு மரங்களை வெட்டிப் பத்தைச் செடிகளை அகற்றிப் புதிதாகத் திருத்ததங்கள் செய்தால் ;

(2) அல்லது அக்காட்டுக்கு நெருப்புவைத்து அல்லது தேசாதிபதியவர்கள் இட்ட கட்டளைக்கு விரோதமாய் நெருப்பை மூட்டி அல்லது அக் காட்டுக்கு அல்லது அதில் எப்பகுதிக்கும் நஷ்டம்வரும்படியாக நெருப்பை எரியவிட்டால் ;

(3) அல்லது அக்காட்டில் எந்தக் காலத்தில் அல்லது எந்தெந்த விதமாக நெருப்பைமூட்ட, எரிக்க அல்லது கொண்டுபோக வேண்டுமென்று இவை நிமித்தம் தத்துவம்பெற்ற ஒரு காட்டு உத்தியோகஸ்தன் காலத்துக்குக் காலம் பிரசித்தப்படுத்தும் அறிவித்தலுக்கு இணங்காதபடி யாராகுதல் நெருப்பை மூட்டினுல் அல்லது எரித்தால் அல்லது கொண்டுபோனுல் ;

(4) மரத்தை வெட்டி மரம் படும்படி வளையமாகப் பட்டையை உரித்து, மரத்தைத் தறித்து பால் அல்லது பிசின்வடியப் பண்ணினுல் அல்லது மரத்தை எரித்தால் ;

(5) கல்லகழ்ந்தெடுத்து, சூளைபோட்டு, கரியெரித்து அல்லது ஏதுஞ் சாமான் சரிக்கட்டும்பொருட்டு யாராகுதல் வஸ்துக்களைச்சேகரித்து அல்லது காட்டுப் புரோசனங்களை அக்காட்டிலிருந்து கொண்டுபோனுல் ;

(6) பயிர்செய்கை நோக்கமாக அல்லது வேறு நோக்கமாக அக்காட்டில் நிலத்தைக் கிளைத்தால் அல்லது தப்புரவாக்கினுல் ;

(7) அக்காட்டிலிலுள்ள சுவருக்கு, வடிகால்களுக்கு வரம்புகளுக்கு, அல்லது வேலிகளுக்கு ஏதாகுதல் நஷ்டம்வரப்பண்ணி அல்லது மாற்றங்கள் செய்து அல்லது அவைகளை நிலைகெடுத்தல், இஃது காரணம்பற்றி குற்றஞ்சாட்டப்பட்டு குற்றவாளிகளாய்த் தீர்க்கப்பட்டால் 6 மாதமளவு மறியலுக்கும் அல்லது 500 ரூபா மட்டும் தெண்டத்துக்கும் அல்லது இருவகைத் தண்டனைக்குமாளாவார்கள். அத்துடன் குற்றப்படுத்தும் கோடு நஷ்டத்துக்காக என்னத்தைக் கொடுக்கும்படியாகக் கட்டளையிட்டாலும் அதற்றைக் கொடுக்கவும் உள்ளாவார்கள். அப்படி அறவிடுகிற பணம் எல்லா விதத்திலும் தெண்டமாக எண்ணப்பட்டு அப்பிரகாரம் அறவாகப்பட்ட-மாத்திரமுமல்லாமல் அக்கோடு விதிக்கக்கூடிய தெண்டத்துக்கு மேலாகமாட்டாது.

எம். கே. நீ. செண்டிஸ்,
அரசாட்சி ஏசண்டு, தென் மாகாணம்.

காலிக் கச்சேரி, 1939 ம் ஸ்ரீ செப்டம்பர்மீ 4 ந் உ.

## அதிஉத்தம தேசாதிபதியவர்களால் ஓர் பிரசித்தம்.

**ஏ. கொல்டிக்கற்,**

காட்டுச் சட்டத்தின் (311 ம் அதிகாரம்) 3 ம் பிரிவின் பிரகாரம், நான் பெற்ற அதிகாரத்தைக்கொண்டு இலங்கைத் தேசாதிபதியாகிய அந்திரு கொல்டிக்கற் ஆகிய நான் இப்பிரசித்தத்தால் இதனோடு அணைத்திருக்கும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட பிரகாரஞ் சுற்றியிருக்கும் இந்நிலத்தை, 1897 ம் ஆண்டு தொடக்கம் 1903 ம் ஆண்டு ஈருகவுள்ள வெண்பூமிச் சட்டத்தின்கீழ் அரசாட்சியாரின் ஆதனங்களென்று வெளியரங்கப்பட்ட அல்லது 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் கீழ் 1902 ம் ஆண்டு மே 7 ம், 1902 ம் ஆண்டு ஜூலை 18 ம், 1902 ம் ஆண்டு ஓகஸ்ட் 2 ம், 1902 ம் ஆண்டு நவம்பர் 12 ந், 1903 ம் ஆண்டு மார்ச் 9 ந், 1903 ம் ஆண்டு மார்ச் 24 ந், 1935 ம் ஆண்டு மார்ச் 13 ம், 1937 ம் ஆண்டு ஓகஸ்ட் 24 ம் திகதிகளிடப்பட்ட கட்டளைகள், 5,864 ம் இலக்க 1902 ம் ஆண்டு ஜூலை 18 ந், 5,875 ம் இலக்க, 1902 ம் ஆண்டு செப்டம்பர் 5 ந், 5,878 ம் இலக்க 1902 ம் ஆண்டு செப்டம்பர் 26 ந், 5,902 ம் இலக்க 1903 ம் ஆண்டு ஜனவரி 30 ந், 5,924 ம் இலக்க, 1903 ம் ஆண்டு மே 29 ந், 8,117 ம் இலக்க 1935 ம் ஆண்டு ஏப்பிரல் 26 ந், 8,316 ம் இலக்க, 1937 ம் ஆண்டு செப்டம்பர் 17 ம், " கெசற் " பத்திரிகைகளில் அச்சிடப்பட்டிருந்தபடி, 1939 ம் ஆண்டு ஒக்றோபர் 20 ம் நாளிலிருந்து ஒதுக்கிய காடென வெளியரங்கப்படுத்துகிறேன்.

அதிஉத்தம தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,
ஈ. ஆர். சட்பெறி,
தேசாதிபதியவர்களின் காரியதரிசி.

கொழும்பு, 1939 ம் ஸ்ரீ ஜூலைமீ 17 ந் உ.

**இராசாவைக் கடவுள் காக்க.**

---

அட்டவணை.

தென் மாகாணத்தில், மாத்தறை டிஸ்திறிக்கைச்சேர்ந்த கங்கபொடபத்துவிலிருக்கும் உல்லல, ஒவீற்றிமுல, கிரிந்த, மகின்பஹல, கஹல, மெடஉயான்கொட, பற்றுவிற்ற, ஊறப்பொல, உடுவே மேற்கு, என்னுங் கிராமங்களைச்சேர்ந்த மஸ்முல்லே கெல ஒதிக்கிய காடென்று தெரியப்படும் அல்லது சொல்லப்படும் ஓர் துண்டு நிலம், 13BU, 23, 26, 26C, 57, 81, 81B, 82, 82B, 89, 94, 99, F. S. P. P. 27 லுள்ள 100 ந் துண்டுகளையும் 1,990 ஏக்கர்கள், 24 பேர்ச்சஸ்கள் உள்ள அடிபாதைகள் பகிரங்கதேவகைக்குரிய சிற்றுறுகளுக்காகப் பாவிக்க விலக்கிவைக்கப்பட்டதைவிடவும்; 26D (துன்டொல பகுதி) 26E ம், 81A ம் (மாடொலப் பகுதி), F. S. P. P. 27 ன் 81D ம் (சிற்றுற்றின் பகுதி) 13BW, 13BX, 57CF, 57CG, 81F என்னுந் துண்டுகளையும், T.P. 190,625 லும், 231,079 லும் உரித்தெடுக்கப்பட்ட நிலங்களையும் மடங்கிய கீழ்வரும் பிரகாரம் சுற்றியுமுள்ளது.—

வடக்கு :—துண்டுகள் 13AE, 13AC, 13AB, 13Z, 13Y, 13X, 13W, 13J (அடிப்பாதையும் ஒதுக்கியதும்), 13 ம் F. S. P. P. 27 க்கு 1 ம் இலக்க அணைவிலிருக்கும் 13BR, T. PS. 242,214 லும் 242,213 லும், F.S.P.P. 27 க்கு 1 ம் இலக்க அணைவிலிருக்கும் துண்டு 26AY, T.PS. 259,631 லும், 190, 628 லும், T. P. 242,316 ல் உரித்தெடுக்கப்பட்ட நிலம், துண்டுகள் 49 ம் F.S.P.P. 27 லுள்ள 50ம் T.P. 242,317, T. P. 190,630 உரித்தெடுக்கப்பட்ட நிலம், துண்டுகள், 26B ம், F.S.P.P. 27 லுள்ள 25 ம் (பெலகெற்றிடெனியற), T. PS. 288,381, 190,622, 288,382, T. P. 190,622 ல் உரித்தெடுக்கப்பட்ட நிலம், T. PS. 191,820, 298,602, 191,819 ம், 288,383 ம்.

கிழக்கு : T. PS. 298,603, 307,334, 289,031, 169,355, 169,356 ம் F. S. P. P. 27 லுள்ள 83 ம் துண்டு, P. P. 4,992 லுள்ள துண்டுகள் P 563, D 564, Q 563, S 563, Y 563, Z 563, T 563 ம் கலகமகே ஹெண்டிறிக்கும் மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட சிலத்தனகேடெனிய, டொன் ஏப்பிறகாம் சிறிவர்தனவால் உரித்தெடுக்கப்பட்ட பொற்றுடெனிய, கலகமகே ஹெண்டிறிக்கும் மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட மெடடெனியாவும் இஹலடெனியாவும், எச். டெனிசாமியும் மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட பஹல டெனியாவும், F. S. P. P. 27 லுள்ள துண்டு 84 T. P. 200,323, F. S. P. P. 27 லுள்ள துண்டு 85 (T. P. 383,584), T. P. 200,322, இப்பறலகேஹேன அல்லது துன்டொலேஹேன, அரசாட்சியாரின் துண்டுகள், 81N, 81CB, (டொல பகுதி), 81J, 81I, 81H, 81G, 81CA, (டொல பகுதி) 81O, 81P, 81U, 81V, 81X, 81BC, 81CG, (டொல பகுதி), F. S. P. P. 27 க்கு 2 ம் இலக்க அணைவிலுள்ள 81BM ம், T. PS. 200,560 ம், 169,962 ம்.

தெற்கு : F. S. P.P.27 லுள்ள 82C துண்டு, T. P. 169,606, சிற்றுறு, T. PS. 169,607 ம், 211,714 ம், T. P. 223,079 ல் உரித்தெடுக்கப்பட்ட நிலம், F. S. P. P. 27 லுள்ள 133 ம் துண்டு (T. P. 370,178), ஆர். பீ. டொன் டியூசாலும் மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட கமகேடெனிய, துண்டுகள் 112, (T. P. 375,530), 98 (T. P. 375,524), 111ம், F.S.P.P. 27 லுள்ள 110 ம் (T.P. 375,824), எச். ஏ. பிறம்பியாலும் மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட விடானேகேவற்ற, துண்டுகள் 82G, 82F, F. S. P. P. 27 க்கு 3 ம் இலக்க அணைவிலுள்ள 82Hம் (மாலடொல பகுதி), F. S. P. P. 27 லுள்ள துண்டு 96 (T. P. 370,169), துண்டுகள், 82E, F. S. P. P. 27 க்கு 3 ம் இலக்க அணைவிலுள்ள 82D ம், T. PS. 299,218 ம் 325,646 ம், T. T. 224,956 ல் உரித்தெடுக்கப்பட்ட நிலம், F. S. P. P. 27 லுள்ள துண்டு 93 (T. P. 378,803), துண்டுகள் 92 ம் F.S.P.P. 27 க்கு 4 ம் இலக்க அணைவிலுள்ள 95 ம், T. P. 299,295, எச். யந்திரசாலும் மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட பிற்றடெனிய, எல். அவன்டிறிசாலும் மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட கல்குலன்வற்ற F, S. P. P. 27 க்கு 4 ம் இலக்க அணைவிலுள்ள துண்டு 89A, துண்டுகள் 105 (T. P. 372,343), 116 (T. T. 370,179), 104 ம், 105 ம் (T. P. 370,171), 103 (T. P. 370,170), F.S.P.P. 27 ம் லுள்ள 91 ம் எச். ஜுவாவாலும் மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட டங்கோவில்லனவற்ற.

மேற்கு : சேடறவாலும் மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட கதுறுகஸ்முல்லவத்த, எச். பெய்யாவால் உரித்தெடுக்கப்பட்ட இம்பொற்றுலன்டேவற்ற, T.P. 91,272 ல் உரித்தெடுக்கப்பட்ட நிலமும் துண்டுகள் 90 (T. P. 369,854), F.S.P.P. 27 லுள்ள 88 (T.P. 369,853), எச். பீ. பெய்யாவால் உரித்தெடுக்கப்பட்ட எல்கெனடெனிய, F.S.P.P. 27 லுள்ள துண்டு 102, (T. P. 375,526), எச். பீ. சாறவால் உரித்தெடுக்கப்பட்ட எல்ஹேனவற்ற, F. S. P. P. 27 லுள்ள துண்டு, 101 (T. P. 375,525), T. P. 129,728, துண்டுகள் 66F, 66E, 67Y, 67X, 67U, 67S, 67Q, 67C, (றோட்டுக்காக ஒதுக்கிய), 67P, 67O, 67N, 67M, F. S. P. P. 27 லுள்ள 67L (நெல்வயல், ஓரமாகவிருக்கும் ஒதுக்கு), T. P. 242,190 ல் உரித்தெடுக்கப்பட்ட நிலம், டபிள்யு. பபாஹமியாலும் மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட கல்கெற்றியடெனிய, P. P. 10,012 லுள்ள துண்டு 4,303, T. PS. 312,029 312,465 ம், 224,972, F.S.P.P. 27 லுள்ள துண்டு 59 (T. P. 375,827), ஏ. லியூசாலும் மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட மலுவலகும்புற, டீ. சீ. அபயகுணவர்தனவாலும் மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட குருடெனிய டொன் டாவிற் விஜயசிங்ஹவாலும் மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட வேவலகும்புற, F.S.P.P. 27 லுள்ள துண்டு, 60 (T. P. 369,851), T. P. 107,016 ல் உரித்தெடுக்கப்பட்ட நிலம், T. P. 191,061 துண்டுகள் 63 (T. P. 370,174), F.S.P.P. 27 லுள்ள துண்டு 64 (T. P. 370,175), பீ. எம். ஹீன்அப்புவாலும், மற்றவர்களாலும் உரித்தெடுக்கப்பட்ட கல்கடமுல்ல, பீ. டொன் றீ. அபேயசேகரவால் உரித்தெடுக்கப்பட்ட விபுல்முல்லகும்புற, F.S.P.P. 27 க்கு 1ம் இலக்க அணைவிலுள்ள துண்டு 80, F.S.P.P. 27 லுள்ள துண்டு 65, F.S.P.P. 27 க்கு 1 ம் இலக்க அணைவிலுள்ள துண்டுகள் 57B ம், 57Aம், F.S.P.P. 27 லுள்ள துண்டு 62, துண்டுகள் 57AF, 57X (அடிப்பாதைக்கு ஒதுக்கிய, 57V, 57U, 57T, 57S, 13BR, 13, 13BT, 13BJ, ம், F.S.P.P. 27 க்கு 1 ம் இலக்க அணைவிலுள்ள 13AP ம்.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்.
நி. 2,112 (கேகாலை).

இதனோடணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிக்கேனும் அச்சொல்லப்பட்ட காணியின் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1939 ம் ஸ்ரீ (செப்டம்பர்) புரட்டாதி மாதம் 15 ந் தேதியிலிருந்து மூன்றுமாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிடப்பட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருப்குமிடத்து காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அச்சொல்லப்பட்ட காணியை முடிக்குரிய காலியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிதித்தல் கொடுக்கப்படுகின்றது.

1939 ம் ஸ்ரீ (ஓகஸ்ட்) ஆவணிமீ 10 ந் தேதியிலன்று கேகாலைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஆர். அலுவிஹாரே,
உதவி அரசாட்சி ஏஜென்ற்.

குறிப்பு.—(a) இச்சொல்லப்பட்ட காலியைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரத்தைக் கேகாலை உதவி அரசாட்சி ஏஜன்று அவர்களிடமும் இச்சொல்லப்பட்ட காணியின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) சொல்லப்பட்ட காணிகளின் வழியுரித்து சொல்லப்பட்ட காணிக் குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

சப்பிரகாமுவ மாகாணம், கேகாலை டிஸ்திறிக், கல்பொட கோறளை, எகொடபொத்தபத்து ஹொரங்கொட கிராமத்திலிருக்கும் துண்டுக் காணிகளாவன :—

பிரதமப்படம் A 243.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | கொறகெடெனியேகேனேபில்லேவ அல்லது போகஹமுல ஹேனை .. .. .. | 0 0 8 |
| 2 | ஷை .. .. .. | 0 0 33 |
| | | 0 1 1 |

எல்லைகளாவன : வடக்கு-வழி ; கிழக்கு-மஹாஓயா ; தெற்கு-முடிக்குரிய கொறக்கடெனியேஹேனேபில்லேவ ; மேற்கு-அறஞயகவிலிருந்து மாவனெல்லைவிற்குப்போகும் பெருந் தெரு.

காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

நி. 2,113 (குருநாக்கல்).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1939 ம் ஸ்ரீ (செப்றெம்பர்) புரட்டாதிமீ 15 ந தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்ப மிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து காணியுரிமை நிர்ணய சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1939 ம் ஸ்ரீ (ஓகஸ்ட்) ஆவணிமீ 25 ந தேதியிலன்று கொழும்பிலுள்ள காணியுரிமை நிர்ணயப் பகுதிக் கந்தோரிற் கொடுக்கப்பட்டது.

எம். டபிள்யு. எவ். அபெயகோன்,
காணியுரிமை நிர்ணய உதவி உத்தியோகஸ்தர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ஓபிசர்) காணி நிர்ணய உத்தியோகஸ்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக் குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

**(c) இவ்வறிவித்தலிற் சொல்லப்பட்டிருக்குங் காணித் துண்டுகளி லுட்பட்டிராது கீழ்க்காணு மெல்லைகட்குட்பட விருக்குங் காணித்துண்டெதுவாயினும் மேற்படி யறிவித்த லின் கீழ் விசாரணை பண்ணப்படமாட்டாததுமன்றி அவ் வித காணித்துண்டைக் குறித்து உரிமை சொல்லவும் வேண்டியதில்லை.**

அட்டவணை.

வடமேல் மாகாணம், குருநாக்கல் டிஸ்திறிக், ஹிறியால ஹத்பது, நிக்கவாகம்பகே கோறளையைச்சேர்ந்த மாறகஹவேவ கிராமத்திலுள்ள காணித்துண்டுகள் : இக்காணித்துண்டுக ளெல்லாங் கீழ்க்காணுமெல்லை கட்குள்ளிருக்கின்றன :—

வடக்கு : எற்றம்பகஹமுலவத்தை கிராம எல்லை ;

கிழக்கு : மஹாஎலயின் அரைவாசி (டெமற்றேகம, மாவிதலுப்பொத்த கிராமங்களின் எல்லைகள்) ;

தெற்கு : மாவிதலுப்பொத்த கிராம எல்லை ;

மேற்கு : வண்ணிஹத்பத்திலே ஹத்தலிஸ்பஹகோறளை கிழக்கின் எல்லை.

கிராமபடம் நி. 3,041.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | டம்பகஹமுலவத்தை .. .. .. | 0 1 33 |
| 2 | பொகஹமுலஹேன, டம்பகஹமுலஹேன .. | 23 2 24 |
| 3 | மாறகஹவெவ (குளமும் கட்டும்) .. .. | 2 0 28 |
| 5 | (ரோட்டும், சேமிப்பும்) .. .. | 0 3 9 |
| 6 | டியுல்கஹமுலஹேன .. .. | 15 1 11 |
| 7 | மஹாஎல அல்லது ஹொற்றி எல (அருவி) (அரைவாசி விசாலம்) | 0 2 14 |
| 8 | பாறகஹ ஹபொத்த .. .. | 2 2 3 |
| 10 | (ரோட்டும் சேமிப்பும்) .. .. | 2 1 8 |
| 12 | டியுல்கஹமுலஹேன .. .. | 1 0 39 |
| 13 | கனேவெவ (குளம்) .. .. .. | 14 0 22 |
| | மொத்தம். .. | 63 0 31 |

குருநாக்கல் நி. உ. 82— 1939.

காணியுரிமை நிர்ணயச்சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

நி. 2,114 (குருநாக்கல்).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1939 ம் ஸ்ரீ (செப்றெம்பர்) புரட்டாதிமீ 15 ந தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்ப மிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1939 ம் ஸ்ரீ (ஓகஸ்ட்) ஆவணிமீ 25 ந தேதியிலன்று கொழும்பிலுள்ள காணியுரிமை நிர்ணயப் பகுதிக் கந்தோரிற் கொடுக்கப்பட்டது.

எம். டபிள்யு. எவ். அபெயகோன்,
காணியுரிமை நிர்ணய உதவி உத்தியோகஸ்தர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ஓபிசர்) காணி நிர்ணய உத்தியோகஸ்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக் குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

**(c) இவ்வறிவித்தலிற் சொல்லப்பட்டிருக்குங் காணித் துண்டுகளி லுட்படடிராது கீழ்க்காணு மெல்லைகட்குட்பட விருக்குங் காணித்துண்டெதுவாயினும் மேற்படி யறிவித்த லின் கீழ் விசாரணை பண்ணப்படமாட்டாததுமன்றி அவ் வித காணித்துண்டைக் குறித்து உரிமை சொல்லவும் வேண்டியதில்லை.**

அட்டவணை.

வடமேல் மாகாணம், குருநாக்கல் டிஸ்திறிக், ஹிரியால ஹற்பற்று, நிக்கவாகம்பகே கோறளையிலுள்ள கீழ்க்காணுங்காணித்துண்டு : இக்காணித் துண்டு கீழ்க்காணு மெல்லைகட்கு ளிருக்கின்றன :—

வடக்கு : ஹத்தலிஸ்பஹ கோறளை கிழக்கின் எல்லை ;

கிழக்கு : பாலுகடுறுவேவ, கும்பக்கடவல, தலகொலவேவ, மெதபொலயகம, கம்புவற்றவான, கறகஸ்வேவ, கள்கிறியவ, அளுத்கம, வற்றுவத்தேகம கிராமங்களின் எல்லைகள் ;

தெற்கும் மேற்கும் : ஹத்தலிஸ்பஹ கோறளை கிழக்கின் எல்லை.

ரோப்போ பிரதமபடம் நி. 11.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | கல்கறியகந்தேமூக்கலான, நில்கிறிகந்தேமூக்கலான, டிகத்துறுகந்தேமூக்கலான, (காடு, கற்பாறைமுதலியவை) .. .. | 1,408 1 35 |

குருநாக்கல் நி. உ. 83— 1939.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

காணி கொள்வனவு சட்டத்தின் (203 ம் அத்தியாயத்தின்) 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் 1934 ம் ஆண்டு ஜூன் மாதம் 22 ந திகதியின் கெசற் பத்திரிகையில் பிரசுரிக்கப்பெற்றிருந்த மாட்சிமை தங்கிய தேசாதிபதியவர்களின் பிரதிகாரியஸ்தத்தின்படி ஸ்தலஸ்தாபன அதிகாரசபையார் மருதானைரோட்டு அகலிப்பதாகிய ஓர் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்சொல்லப்படும் காணியை எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் :

பிரதமபடத்து இலக்கம் A 942 மருதானை தெற்குப் பகுதி.

| துண்டு | காணியினது பெயர் | விபரம் | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 5 | மருதானைரோட்டு வரிப்பண இலக்கம் G 528 உள்ள காணியின் பகுதி | பாதை .. | (1) காலஞ்சென்ற ஸ்ரீமதி டோனா எமலியா றெஜீனா டி அல்விஸின் உரித்தாளிகளுக்காக டாக்டர் டி. டபிள்யு. பி. பெரேரா, ரேஸ்மீட் பிளேஸ், (2) யோன் தெனுவர, 607/1, 2 ம் டிவிஷன் மருதானை, (3) மொறட்டுவ திரு அப்போன்சுவும் அவர் பாரியாருக்குமாக ஆர்தர் எஸ். பேர்னாண்டோ, பிறக்டர் கோட்டடி | 0 0 1·20 |

மேற் சொல்லப்பட்ட காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன். மேற் குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1939 ம் ஆண்டு ஒக்ற்ரோபர் (ஐப்பசி) மாதம் 11 ந் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு கொழும்பு நகரசங்கக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மைக்கும், அவ்வுடந்தைகளுக்காகக் கொடுக்கும் பணத்தைப் பெறுவதற்கு எவ்வித பாத்தியமுடையவர்களென்றும் உறுதிகளாலும், பதிவுகொப்பிகளாலும் எனக்கு அத்தாட்சிப்பண்ணி அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மையையும், அவ்வுடந்தைகளுக்காக, தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

நகரசங்கக் கந்தோர்
கொழும்பு, 1939 ம் ஆு செப்ரெம்பர்மீ 12 ந் வ.

எஸ். பீ. விக்கிரமசிங்ஹ,
நகர கமிஷனர்.

---

குண்டசாலைக்கு சுடலை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 587. குறிச்சி—குண்டசாலை.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கொண்டசல்லே தோட்டம் . . . | பலா, தென்னை முதலிய வடங்கிய சுடலை | அங்கிலோ சிலோன் ஜெனறல் எஸ்றேற்ஸ் கொம்பனி லிமிற்றெட், ஏசண்டுகள் ; மெசேர்ஸ் போயிஸ் பிறதேர்ஸ் (சகோதரர்கள்) கொம்பனியும் லிமிற்றெட், கொழும்பு | 0 3 39·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தின் (203 ம் அதிகாரம்) 5 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனாதிகார ஆட்சி மந்திராலோசனைச்சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்என்பதை 6 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஆு (ஒக்ற்ரோபர்) ஐப்பசி மாதம் 9 ந் தேதியின்று காலை 10 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1939 ம் ஆு (செப்டெம்பர்) புரட்டாதிமீ 11 ந் வ.

பீ. எம். றெனிசன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## அரசாட்சியாரின் விளம்பரங்கள்—(தொடர்பு.)

### கட்டளை.

1939 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தின் விலைகள் கட்டுப்பாட்டுச் சட்டம்.

1939 ம் ஆண்டின் 39 ம் இலக்க விலைகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 ம் பிரிவின் பிரகாரம் நமக்கு உள்ள அதிகாரத்தைக்கொண்டு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் விலைகள் கட்டுப்பாட்டு உபதலைவராகிய றிச்சேட் பிறையன்ற் நயிஷ் ஆகிய நான் இக்கட்டளையினால் :—

(1). யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாண மணியகாரனின் பிரிவுக்குள் (யாழ்ப்பாண நகரசங்கப் பகுதியுட்பட) இங்கே அணைக்கப்பட்ட அட்டவணையின் 2, 3, 4 ம் நிரைகள் ஒவ்வொன்றிலும் மொத்தவிலை மூடை ஒன்றுக்கும் சில்லறைக்குப் புசல் ஒன்றுக்கும் சில்லறைக்கு கொத்து ஒன்றுக்கும் சொல்லப்பட்ட அட்டவணையில் 1 ம் நிரையில் காட்டப்பட்ட அரிசிவகைகளுக்கு சட்டப்படி விற்கும் ஆகக்கூடிய விலைகள் முறையே நியமிக்கப் பட்டிருக்கிறது. 1 ம் நிரையில் காட்டப்பட்ட அரிசிவகைகளுக்கு அவை அவைகளுக்கு நேரே 2, ம் 3, 4 ம் நிரையில் முறையே காட்டப்பட்ட விலைகளுக்குமேல் மொத்த விலைக்காவது சில்லறைவிலைக்காவது விற்கப்பட்டாது.

(2). இக்கட்டளைக்கு—

(*a*) மறுவிற்பனைக்காக விற்கும் எத்தொகை அரிசியும் தொகை விற்பனவாகக் கருதப்படும்,

(*b*) சாப்பாட்டுக்கு அல்லது பாவிப்புக்கு விற்கப்படும் எத்தொகை அரிசியும் சில்லறை விற்பனவெனக் கருதப்படும்,

(*c*) இப்பகுதிக்குள் ஒரு கொத்துக்குக் குறைந்த அரிசியின் விலை அப்பகுதிக்கு இக்கட்டளைப்படி அவ்வவ்வித அரிசிக்கு விதிக்கப்பட்ட விலையைக்கொண்டு விற்கவேண்டியது,

(*d*) குறுணல் அரிசி அல்லாத மற்றைய அரிசிகளை மூடை ஒன்றுக்கு தானிய அளவைப்படி $2\frac{1}{2}$ புசலுக்குக் குறையாமல் இருக்க வேண்டியது,

(*e*) ஒரு மூடை குறுணலரிசி தானிய அளவைப்படி $3\frac{3}{4}$ ல் புசலுக்குக் குறையாமல் இருக்கவேண்டியது,

(*f*) " கொத்து " என்றது தானிய அளவையின்கீழ் " குவாட் " (பறைவெட்டி) ஒரு புசலின் 32 ல் ஒரு பங்கு என்ற அளவைக் குறிக்கின்றது.

இக்கட்டளையிருக்கும் காலம் வரையும், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாண மணியகாரன் பிரிவின் எல்லைக்குள் அரிசி விற்பனவு செய்தலில் பின்காட்டப்படும் நிபந்தனைகளை கவனிக்கவேண்டியது.

இக்கட்டளையினால் நியமிக்கப்பட்ட பலவகை அரிசிகளின் அதிகக்கூடிய விலைகளைக்காட்டும் ஓர் விளம்பரத்தை அரிசி விற்பனவுக்கு வைத்திருக்கும ஒவ்வொரு பண்டகசாலை அல்லது கடையில் சொந்தக்காரன் அல்லது அவைகளை வைத்து நடத்துபவன், பண்டகசாலை அல்லது கடைக்குட் போகும் ஒவ்வொருவரும் எளிதில் காணக்கூடிய விதமாக அப்பண்டகசாலையின் அல்லது கடையின் எவரும் கவனிக்கக்கூடிய ஓர் இடத்தில் வைக்கவேண்டியது.

யாழ்ப்பாணம் கச்சேரி,
1939 ம் ஆண்டு புரட்டாதிமீ 12 ந் வ.

ஆர். பி. நயிஷ்,
யாழ்ப்பாண டிஸ்திறிக் அரிசி விலைக்கட்டுப்பாட்டு உபதலைவர்.

அட்டவணை.

யாழ்ப்பாண மணியக்காரன் பிரிவுக்கு (நகர சங்கப் பகுதி உட்பட) நியமிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள்.

| நிரை 1. விபரம். | நிரை 2. ஒரு மூடையின் ஆகக் கூடிய விலை. ரூ. ச. | நிரை 3. ஒரு புசலின் ஆகக் கூடிய விலை. ரூ. ச. | நிரை 4. ஒரு கொத்து ஆகக்கூடிய விலை. சதம். |
|---|---|---|---|
| மில்சாட் (அரக்கன்) .. | 10 40 ($2\frac{1}{2}$ புசல்) | .. 4 28 | .. $14\frac{1}{2}$ |
| றேஸ் .. | 11 63 ,, | .. 4 75 | .. 16 |
| முத்துச்சம்பா .. | 12 0 ,, | ... 4 90 | .. $16\frac{1}{2}$ |
| குருணல் பச்சை அரிசி .. | 13 57 ($3\frac{3}{4}$ புசல்) | .. 3 73 | .. $12\frac{1}{2}$ |

---

### கட்டளை.

1939 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தின் விலைகள் கட்டுப்பாட்டுச் சட்டம்.

1939 ம் ஆண்டின் 39 ம் இலக்க விலைகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 ம் பிரிவின் பிரகாரம் நமக்கு உள்ள அதிகாரத்தைக்கொண்டு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் விலைகள் கட்டுப்பாட்டு உபதலைவராகிய றிச்சேட் பிறையன்ற் நயிஷ் ஆகிய நான் இக்கட்டளையினால் :—

(1) யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு-கிழக்கு, தென்மராட்சிப் பகுதி மணியகாரன் பகுதிகளுக்குள்ளும், தீவுப்பற்று மணியகாரன் பிரிவிலும் (புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு எழுவைதீவு புறநீங்கலாக) இங்கே அணைக்கப்பட்ட அட்டவணையின் 2 ம், 3 ம் 4 ம் நிரைகள் ஒவ்வொன்றிலும் மொத்தவிலை மூடை ஒன்றுக்கும் சில்லறைக்குப் புசல் ஒன்றுக்கும் சில்லறைக்குக் கொத்து ஒன்றுக்கும் சொல்லப்

பட்ட அட்டவணையில் முதலாம் நிரையிற் காட்டப்பட்ட அரிசிவகைகளுக்குச் சட்டப்படி விற்கும் ஆகக் கூடிய விலைகள் முறையே நியமிக்கப் பட்டிருக்கிறது. முதலாம் நிரையிற் காட்டப்பட்ட அரிசிவகைகளுக்கு அவையவைகளுக்கு நேரே 2 ம், 3 ம், 4 ம், நிரையில் முறையே காட்டப்பட்ட விலைகளுக்கு மேல் மொத்தவிலைக்காவது, சில்லறை விலைக்காவது விற்கப்படாது.

(2) இக்கட்டளைக்கு :

(a) மறுவிற்பனைக்காக விற்கும் எத்தொகை அரிசியும் தொகை விற்பனவாகக் கருதப்படும்,

(b) சாப்பாட்டுக்கு அல்லது பாவிப்புக்கு விற்கப்படும் எத்தொகை அரிசியும் சில்லறை விற்பனவெனக் கருதப்படும்,

(c) இப்பகுதிகளுக்குள் ஒரு கொத்துக்குக் குறைந்த அரிசியின் விலை அப்பகுதிகளுக்கு இக்கட்டளைப்படி அவ்வவ்வித அரிசிக்கு விதிக்கப் பட்ட விலையைக்கொண்டு விற்கவேண்டியது,

(d) குறுணலரிசி அல்லாத மற்றைய அரிசிகளை மூடையொன்றுக்கு தானிய அளவைப்படி 2½ புசலுக்குக் குறையாமலிருக்கவேண்டியது,

(e) ஒரு மூடை குறுணல் அரிசி தானிய அளவைப்படி 3¾ புசலுக்கு குறையாமலிருக்க வேண்டியது,

(f) " கொத்து " என்றது தானிய அளவையின் கீழ் " குவாட் " (பறை வெட்டி) ஒரு புசலின் 32 ல் ஒரு பங்கு என்ற அளவைக் குறிக்கின்றது.

இக்கட்டளையிருக்கும் காலம்வரையும், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்குக்-கிழக்கு, தென்மராட்சி மணியகாரரின் பிரிவுகளின் எல்லைகளுக்குள்ளும் தீவுப்பற்று மணியகாரன் பிரிவின் (புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு புறநீங்கலாக) எல்லை களுக்குள்ளும் அரிசி விற்பனவு செய்தலில் பின் காட்டப்படும் நிபந்தனைகளைக் கவனிக்கவேண்டியது.

இக்கட்டளையினால் நியமிக்கப்பட்ட பலவகை யரிசிகளின் அதிகக் கூடியவிலைகளைக் காட்டும் ஓர் விளம்பரத்தை அரிசி விற்பனவுக்கு வைத்திருக் கும் ஒவ்வொரு பண்டகசாலை அல்லது கடையின் சொந்தக்காரன் அல்லது அவைகளைவைத்து நடத்துபவன் பண்டகசாலை அல்லது கடைக்குள் போகும் ஒவ்வொருவரும் எளிதில் காணக்கூடிய விதமாக அப்பண்டகசாலையின் அல்லது கடையின் எவருங் கவனிக்கக்கூடிய ஓரிடத்தில் வைக்கவேண்டியது.

யாழ்ப்பாணம் கச்சேரி,
1939 ம் ஆண்டு புரட்டாதிமீ 12 ந் உ.

ஆர். பி. நையிஷ்,
யாழ்ப்பாண டிஸ்திறிக் அரிசி விலைக் கட்டுப்பாட்டு உபதலைவர்.

அட்டவணை.

வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு-கிழக்கு, தென்மராட்சி மணியகாரரின் பிரிவுகளுக்கும் தீவுப்பற்று மணியகாரன் பிரிவுக்கு (புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு புறநீங்களாக) நியமிக்கப்பட்ட ஆகக்கூடிய விலை.

| நிரை 1. | | நிரை 2. | | நிரை 3. | | நிரை 4. |
|---|---|---|---|---|---|---|
| விபரம். | | ஒரு மூடையின் ஆகக்கூடிய விலை | | ஒரு புசலின் ஆகக்கூடிய விலை | | ஒரு கொத்து ஆகக்கூடிய விலை |
| | | ரூ. ச. | | ரூ. ச. | | சதம். |
| மில்சாட் (அரக்கன்) | .. | 10 52¼ (2½ புசல்) | .. | 4 33 | .. | 15 |
| ரேஸ் | .. | 11 75½ ,, | .. | 4 80 | .. | 16 |
| முத்துசம்பா | .. | 12 12½ ,, | .. | 4 95 | .. | 16½ |
| குறுணல் பச்சை | .. | 13 69¼ (3¾ புசல்) | .. | 3 76 | .. | 13 |

---

**கட்டளை.**

1939 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தின் விலைகள் கட்டுப்பாட்டுச் சட்டம்.

1939 ம் ஆண்டின் 39 ம் இலக்க விலைகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 ம் பிரிவின் பிரகாரம் நமக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் விலைகள் கட்டுப்பாட்டு உப தலைவராகிய றிச்சேட் பிறையன்ற் நயிஷ் ஆகிய நான் இக்கட்டளையினால் :—

(1) யாழ்ப்பாணட் டிஸ்திறிக் வடமராட்சி பச்சிலைப்பள்ளி கரைச்சி மணியகாரரின் பிரிவுகளுக்குள் இங்கே அணைக்கப்பட்ட அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் நிரைகள் ஒவ்வொன்றிலும் மொத்தவிலை மூடை ஒன்றுக்கும் சில்லறைக்குப் புசல் ஒன்றுக்கும் சில்லறைக்குக் கொத்து ஒன்றுக்கும் சொல்லப்பட்ட அட்டவணையில் 1 ம் நிரையிற் காட்டப்பட்ட அரிசிவகைகளுக்கு சட்டப்படி விற்கும் ஆகக்கூடிய விலைகள் முறையே நியமிக்கப்பட்டிருக் கிறது. 1 ம் நிரையிற் காட்டப்பட்ட அரிசிவகைகளுக்கு அவையவைகளுக்கு, நேரே 2 ம், 3 ம், 4 ம் நிரையில் முறையே காட்டப்பட்ட விலைகளுக்கு மேல் மொத்த விலைக்காவது சில்லறை விலைக்காவது விற்கப்படாது.

(2) இக்கட்டளைக்கு—

(a) மறுவிற்பனைக்காக விற்கும் எத்தொகை அரிசியும் தொகை விற்பனவாகக் கருதப்படும்,

(b) சாப்பாட்டுக்கு அல்லது பாவிப்புக்கு விற்கப்படும் எத்தொகை அரிசியும் சில்லறை விற்பனவெனக் கருதப்படும்.

(c) இப்பகுதிகளுக்குள் ஒரு கொத்துக்குக் குறைந்த அரிசியின் விலை அப்பகுதிகளுக்கு இக்கட்டளைப்படி அவ்வவ்வித அரிசிக்கு விதிக்கப் பட்ட விலையைக்கொண்டு விற்கவேண்டியது,

(d) குறுணல் அரிசி அல்லாத மற்றைய அரிசிகளை மூடை ஒன்றுக்குத் தானிய அளவைப்படி 2½ புசலுக்குக்குறையாமல் இருக்கவேண்டியது.

(e) ஒரு மூடை குறுணல் அரிசி தானிய அளவைப்படி 3¾ புசலுக்குப் குறையாமல் இருக்கவேண்டியது,

(f) "கொத்து" என்றது தானிய அளவையின் கீழ் "குவாட்" (பறைவெட்டி) ஒரு புசலின் 32 ல் ஒரு பங்கு என்ற அளவைக் குறிக்கின்றது.

இக்கட்டளை இருக்கும் காலம் வரையும், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சி, பச்சிலைப்பளி, கறைச்சி மணியகாரரின் பிரிவுகளின் எல்லைகளுக் குள்ளும் அரிசி விற்பனவு செய்தலில் பின் காட்டப்படும் நிபந்தனைகளைக் கவனிக்கவேண்டியது.

இக்கட்டளையினால் நியமிக்கப்பட்ட பலவகை அரிசிகளின் அதிகக் கூடிய விலைகளைக் காட்டும் ஓர் விளம்பரத்தை அரிசி விற்பனவுக்கு வைத்திருக் கும் ஒவ்வொரு பண்டகசாலை அல்லது கடையின் சொந்தக்காரன் அல்லது அவைகளை வைத்து நடத்துபவன் பண்டகசாலை அல்லது கடைக்குள் போகும் ஒவ்வொருவரும் எளிதில் காணக்கூடிய விதமாக அப்பண்டகசாலையின் அல்லது கடையின் எவருங் கவனிக்கக்கூடிய ஓரிடத்தில் வைக்கவேண்டியது.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1939 ம் ஆண்டு புரட்டாதிமீ 12 ந் உ.

ஆர். பி. நயிஷ்.
யாழ்ப்பாண டிஸ்திறிக் அரிசிவிலைக் கட்டுப்பாட்டு உபதலைவர்.

அட்டவணை.

வடமராட்சி, பச்சிலைப்பளி கரைச்சி மணியகாரரின் பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள்.

| நிரை 1. | | நிரை 2. | | நிரை 3. | | நிரை 4. |
|---|---|---|---|---|---|---|
| விபரம். | | ஒரு மூடையின் ஆகக்கூடிய விலை | | ஒரு புசலின் ஆகக்கூடிய விலை | | ஒரு கொத்து ஆகக்கூடிய விலை |
| | | ரூ. ச. | | ரூ. ச. | | சதம். |
| மில்சாட் (அரக்கன்) | .. | 10 55 (2½ புசல்) | .. | 4 34 | .. | 15 |
| ரேஸ் | .. | 11 78 ,, | .. | 4 81 | .. | 16 |
| முத்துசம்பா | .. | 12 15 ,, | .. | 4 96 | .. | 16½ |
| குறுணல் பச்சை | .. | 13 72 (3¾ புசல்) | .. | 3 77 | .. | 13 |

### கட்டளை.

1939 ம் ஆண்டின் 39 ம் இலக்கச் சட்டத்தின் விலைகள் கட்டுப்பாட்டுச் சட்டம்.

1939 ம் ஆண்டின் 39 ம் இலக்க விலைகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 ம் பிரிவின் பிரகாரம் நமக்குள்ள அதிகாரத்தைக்கொண்டு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் விலைகள் கட்டுப்பாட்டு உபதலைவராகிய றிச்சேட் பிறையன்ற் நயிஷ் ஆகிய நான் இக்கட்டளையினால் :—

(1) யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நெடுந்தீவு, பூனகரி, துனுக்காய் மணியகாரரின் பிரிவுகளுக்குள்ளும் தீவுப்பற்று மணியகாரரின் புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, என்ற தீவுகளுக்குள்ளும், இங்கே அணைக்கப்பட்ட அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் நிரைகள் ஒவ்வொன்றிலும் மொத்த விலை மூடை ஒன்றுக்கும் சில்லறைக்குப் புசல் ஒன்றுக்கும் சில்லறைக்குக் கொடுத்து ஒன்றுக்கும் சொல்லப் பட்ட அட்டவணையில் 1 ம் நிரையில் காட்டப்பட்ட அரிசிவகைகளுக்குச் சட்டப்படி விற்கும் ஆகக் கூடிய விலைகள் முறையே நியமிக்கப்பட் டிருக்கிறது. 1 ம் நிரையில் காட்டப்பட்ட அரிசிவகைகளுக்கு அவையவைகளுக்கு நேரே 2ம், 3ம், 4ம் நிரையில் முறையே காட்டப்பட்ட விலைகளுக்குமேல் மொத்த விலைக்காவது சில்லறை விலைக்காவது விற்கப்படாது.

(2) இக்கட்டளைக்கு—

(*a*) மறுவிற்பனைக்காக விற்கும் எத்தொகை அரிசியும் தொகை விற்பனவாகக் கருதப்படும்,

(*b*) சாப்பாட்டுக்கு அல்லது பாவிப்புக்கு விற்கப்படும் எத்தொகை அரிசியும் சில்லறை விற்பனவெனக் கருதப்படும்,

(*c*) இப்பகுதிகளுக்குள் ஒரு கொத்துக்குக் குறைந்த அரிசியின் விலை அப்பகுதிகளுக்கு இக்கட்டளைப்படி அவ்வவ்வித அரிசிக்கு விதிக் கப்பட்ட விலையைக்கொண்டு விற்கவேண்டியது,

(*d*) குறுணல் அரிசி அல்லாத மற்றைய அரிசிகளை மூடை ஒன்றுக்குத் தானிய அளவைப்படி 2½ புசலுக்குக் குறையாமல் இருக்க வேண்டியது,

(*e*) ஒரு மூடை குருணல் அரிசி தானிய அளவைப்படி 3¾ புசலுக்குக் குறையாமல் இருக்கவேண்டியது,

(*f*) "கொத்து" என்றது தானிய அளவையின் கீழ் "குவாட்" (பறைவெட்டி) ஒரு புசலின் 32 ல் ஒரு பங்கு என்ற அளவைக் குறிக்கின்றது.

இக்கட்டளை இருக்கும் காலம் வரையும், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், நெடுந்தீவு, பூனகரி, துனுக்காய், தீவுப்பற்று மணியகாரரின் பிரிவுகளின் எல்லைகளுக்குள்ளும் தீவுப்பற்று மணியகாரன் பிரிவில் (புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு என்னும் தீவுகளுக்குள்ளும்) அரிசி விற்பனவு செய்தலில் பின்காட்டப்படும் நிபந்தனைகளைக் கவனிக்கவேண்டியது.

இக்கட்டளையினால் நியமிக்கப்பட்ட பலவகை அரிசிகளின் அதிகக்கூடிய விலைகளைக் காட்டும் ஓர் விளம்பரத்தை அரிசி விற்பனவுக்கு வைத்திருக்கும் ஒவ்வொரு பண்டகசாலை அல்லது கடையின் சொந்தக்காரன் அல்லது அவைகளை வைத்து நடத்துபவன், பண்டகசாலை அல்லது கடைக்குள் போகும் ஒவ்வொருவரும் எளிதில் காணக்கூடிய விதமாக அப்பண்டகசாலையின் அல்லது கடையின் எவரும் கவனிக்கக்கூடிய ஓர் இடத்திற் வைக்கவேண்டியது.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1939 ம் ஆண்டு (செப்டெம்பர்) புரட்டாதிமீ 12 ந் வ,

ஆர். பி. நயிஷ்,
யாழ்ப்பாண டிஸ்திறிக் அரிசிவிலைக் கட்டுப்பாட்டு உபதலைவர்.

அட்டவணை.

நெடுந்தீவு, பூனகரி–துனுக்காய் மணியகாரரின் பிரிவுகளுக்கும் தீவுபற்று மணியகரரன் பிரிவில் புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு என்னும் தீவுகளுக்கும் நியமிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள்

| நிரை 1.<br>விபரம் | | நிரை 2.<br>ஒரு மூடையின் ஆகக்கூடிய விலை | | நிரை 3.<br>ஒரு புசலின் ஆகக்கூடிய விலை | | நிரை 4.<br>ஒரு கொத்து ஆகக்கூடிய விலை |
|---|---|---|---|---|---|---|
| | | ரு. ச. | | ரு. ச. | | சதம் |
| மில்சாட் (அரக்கன்) | ... | 10 60 (2½ புசல்) | .. | 4 36 | .. | 15 |
| ஹேஸ் | .. | 11 83 ( ,, ) | .. | 4 83 | .. | 16 |
| முத்துச்சம்பா | .. | 12 20 ( ,, ) | .. | 4 98 | .. | 16½ |
| குறுணல் பச்சை அரிசி | .. | 13 77 (3¾ புசல்) | .. | 3 78 | .. | 13 |

---

## நகரசங்க அங்கத்தவர் தெரிவுசெய்தல்.

பேருவலை நகர டிஸ்திறிக் சங்கத்திற்கு அங்கத்தவரைத் தெரிவுசெய்தல்.

1939 ம் ஆண்டு (ஒக்ற்றோபர்) ஐப்பசி மாசம் 21 ந் திகதி சனிக்கிழமை பேருவலை நகர டிஸ்திறிக் சங்கத்திற்கு 1 ம் நெர. தெரிவுப்பகுதிக்கு ஒரு அங்கத்தவரைத் தெரிவுசெய்யப்படுமென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரதிஸ்தனையும் எழுத்தின் மூல மாகப் பெயர் கூறப்படவேண்டும். தெரிவுசெய்யப்படுதலுக்கு தன்னை ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொரு பிரதிஸ்தருக்கும் உடந்தையான தெரிவுப் பகுதியைச்சேர்ந்த தெரிவுடாப்பில் பெயர்கள் பதியப்பட்ட இருவரால் அப்பெயர் கூறப்படும் பிரதி கையொப்பமிடப்படவேண்டும். 1939 ம் ஆண்டு (ஒக்ற்றோபர்) ஐப்பசி மாசம் 21 ந் திகதி முற்பகல் 10 மணிக்கு அல்லது அதற்கு முந்தி பேருவலை நகர டிஸ்திறிக் சங்கத்தின் கந்தோரில் பெயர் கூறப்பட்ட பிரதி கொடுபடவேண்டும்.

ஒரு பிரதிஸ்தருக்கு மேற்பட்ட பெயர் கூறப்பட்டால், 1939 ம் ஆண்டு (நொவெம்பர்) கார்த்திகை மாசம் 4 ந் திகதி சனிக்கிழமை, அளுத்கடை அரசினர் ஆண் ஆங்கிலப் பாடசாலையில் தெரிதல் செய்யப்படும். அத் தெரிவு முற்பகல் 9 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 1 மணிக்கு முடியும்.

பீ. ஜே. ஹட்சன்,
களுத்துறை உதவி அரசாட்சி ஏசண்டர்.

களுத்துறைக் கச்சேரி,
1939 ம் ஷூ புரட்டாதிமீ 11 ந் வ.

நாவலப்பிட்டிய டிஸ்திறிக் நகர சபை 3 வது தொகுதி அங்கத்தவர் தேர்தல்.

நாவலப்பிட்டிய டிஸ்திறிக் நகரசபையின் 3 வது தொகுதிக்கு அங்கத் தவரொருவரை தெரிவுசெய்ய உத்தேசித்திருக்கிறதென்று இத்தபல் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு அபேட்சகரும் எழுத்தால் நியமிக்கப்பட வேண்டும். ஒவ் வொரு அபேட்வசகரின் நியமனக்கடுதாசி தேர்தல் பிரிவின் (நாவலப் பிட்டிய 3-ருது தொகுதி) தெரிவு இடாப்பில் பதியப்பெற்ற குறைந்த பட்சம் இவர்களால் கைச் சாத்திடப்பட்டு, தேர்தலுக்காக நியமிக்கப்பட்ட நாளாகிய, 1939 ம் ஆண்டு ஐப்பசிமீ 23 ந் திகதி, திங்களன்று முற்பகல் 10 மணிக்கோ அல்லது அதற்கு முன்போ நாவலப்பிட்டிய டிஸ்திறிக் நகர சபை கந்தோரில் ஒப்புவிக்கப்படவேண்டும்.

ஒரு அபேட்சகருக்கு மேல் நியமிக்கப்பட்டால், நாவலப்பிட்டிய் மாஜிஸ்ற் றேற் கோட்டில் 1939 ம் ஆண்டு கார்த்திகைமீ 3 ந் திகதி, வெள்ளிக் கிழமை வாக்குகள் எடுக்கப்படும். அவ்வாக்கெடுத்தல் முற்பகல் 9 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 1 மணிக்கு முடியும்.

1939 ம் ஆண்டு ஆவணிமீ 25 ந் திகதியின் 8,476 ம் இலக்க இலங்கை அரசாட்சி " கெசெற் " பத்திரிகையில் பிரசுரித்திருந்த அறிவித்தல் இத்தால் நீக்கப்பட்டுவிட்டது.

ஈ. ரீ. டைசன்,
மத்திய மாகாண அரசாட்சி ஏஜண்டு.

**கண்டிக் கச்சேரி,**
1939 ம் ஆண்டு புரட்டாதிமீ 11 ந் வ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.